**செய்தி வெளியீடு எண் : 680** **நாள்: 27.04.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.4.2022) தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் திருவிழாவின்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்த பின்னர், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி**

இன்று அதிகாலை தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் நடைபெற்ற திருவிழாவின் போது, நிகழ்ந்த விபத்தில் 11 நபர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். இந்த சம்பவம் என்பது நாம் அனைவருக்கும் தாங்க முடியாத ஒரு துயரத்தை நமக்கு கொடுத்திருக்கிறது. இந்த துயரத்தை விளக்க வார்த்தைகளே இல்லை என்றுதான் நான் சொல்ல வேண்டும்.

இன்று விடியற்காலை நான் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு மிகுந்த வேதனைப்பட்டேன், துடிதுடித்துப் போனேன். உடனடியாக மீட்பு நடவடிக்கைகள் மற்றும் மருத்துவ உதவிகளை செய்ய வேண்டும் என்று அரசு அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டேன். அதைத் தொடர்ந்து, இந்த மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய திரு.பழனிமாணிக்கம், இந்த மாவட்டத்தினுடைய செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான திரு.துரை சந்திரசேகரன், சட்டமன்ற உறுப்பினர் திரு. நீலமேகம் போன்றவர்கள், அதேபோல, இந்த மாவட்டத்திற்கு, இந்தப் பகுதிக்கு தொடர்புடைய உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், அனைவரும் அந்த இடத்திற்குச் சென்று மீட்புப் பணிகளில் ஈடுபடுங்கள், உடனடியாக அரசின் சார்பில் நிவாரணப் பணிகள் எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று பார்வையிடுங்கள் என்று சொல்லி நான் உத்தரவிட்டு அவர்களையெல்லாம் அனுப்பி வைத்தேன்.

அதைத் தொடர்ந்து இன்று காலையில் சட்டமன்றத்தில், உயிரிழந்த அந்த 11 பேருக்கு இரங்கல் தீர்மானத்தையும் நிறைவேற்றி நடந்த சம்பவத்தை சட்டமன்றத்தில்

நான் எடுத்துச்சொல்லி, அதற்குப் பிறகு விரைவாக விமானத்தைப் பிடித்து மதுரையில் இறங்கி, மதுரையிலிருந்து தஞ்சைக்கு வந்து நானும், நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய திரு.நேரு அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. டி.ஆர்.பாலு அவர்கள் மற்றும் பலரும் உயிரிழந்த குடும்பத்தினரையெல்லாம் போய் நாங்கள் சந்தித்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில், அரசின் சார்பில் என்னுடைய ஆறுதலை சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். அவர்களுடைய துயரத்தில் இந்த தஞ்சாவூருடைய மண்ணின் மைந்தன் என்ற அந்த முறையில் நானும் பங்கெடுக்கிறேன்.

மேலும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணத் தொகையாக அரசின் சார்பில் 5 லட்சம் ரூபாய் வழங்கவும் ஆணையிட்டிருக்கிறேன். அதையும் நான் வழங்கிவிட்டு தான் இங்கு வந்திருக்கிறேன். அரசின் சார்பில் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாயையும் வழங்கிவிட்டுத் தான் வந்திருக்கிறேன். அதேபோல, விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு இருக்கக்கூடியவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களையும் பார்த்து, அவர்களுக்கும் உயர் சிகிச்சை வழங்க வேண்டுமென்று இந்த மருத்துவமனையில் இருக்கக்கூடிய மருத்துவர்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் நான் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அதில் படுகாயம் அடைந்தவர்களுக்கு அரசின் சார்பில் 1 இலட்சம் ரூபாயும், லேசான காயத்தோடு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு 50,000 ஆயிரம் ரூபாயும் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்து, இப்போது அதை வழங்கிவிட்டு வந்திருக்கிறேன். அதேபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் காயமடைந்த அனைவருக்கும் 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

நடந்த விபத்து என்பது நம் அனைவருக்கும் ஒரு துயரத்தை உருவாக்கி இருந்தாலும், இந்த விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும், அதற்கு சரியான காரணத்தை அறிய வேண்டும். வருங்காலங்களில் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாத வகையில் தடுத்தாக வேண்டும். அதற்கு என்ன வழிமுறைகள் இருக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்காக, அதற்குரிய அறிக்கை தருவதற்காக, வருவாய்

நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்களை ஆய்வு மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று அவருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை.

இந்த சூழ்நிலையைப் சாக்காகப் பயன்படுத்திக்கொண்டு, இதை அரசியல் ஆக்க வேண்டும் என்ற முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. இதில் எல்லாம் அரசியல் பார்க்கக்கூடாது என்பது தான் என்னுடைய எண்ணம். போற்றுவார் தூற்றுவார் பற்றி நான் எப்போதும் கவலைப்பட்டது கிடையாது. மக்களுக்கு துயரம் ஏற்படாமல் காக்கவும், அதையும் மீறி இதுபோன்ற விபத்துக்கள் நேரிடும்போது, அந்தத் துயரத்தில் நான் பங்கு பெறுவது, இந்த அரசு பங்கு பெறுவது, மக்களோடு இருக்க வேண்டும் என்பது மட்டுமே என்னுடைய இலக்கு. அதனை நோக்கியே நாங்கள் எப்போதும் பயணிப்போம் என்பதை இந்த நேரத்திலே உங்கள் மூலமாக நாட்டு மக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**கேள்வி:** இந்த சம்பவம் குறித்து One man Commission..

**மாண்புமிகு முதலமைச்சர் பதில்:** அது குறித்து தான், ஆய்வு நடத்த சொல்லியிருக்கிறோம். One man Commission கூட போட்டிருக்கிறோம். அந்த அறிக்கைகள் வந்த பிறகு என்ன உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை எடுப்போம் என்பதுதான் இந்த அரசினுடைய நிலைப்பாடு.

**கேள்வி:** சம்பவம் நடப்பதற்கு முன்பாக...

**மாண்புமிகு முதலமைச்சர் பதில்:** இப்போதே உங்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களுக்கு சரியான விளக்கத்தை நாங்கள் சொல்ல முடியாது. என்ன நடந்திருக்கிறது என்று விசாரிப்பதற்குத்தான் ஒரு குழு போட்டிருக்கிறோம். இந்தக் குழு அறிக்கை கொடுத்த பிறகு முறைப்படி வெளிப்படுத்துவோம்.

**கேள்வி:** இதுபோன்ற சம்பவம் இனிவருங்காலங்களில் நடக்காமல் இருப்பதற்கு அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் வராத கோயில்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமா அல்லது வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படுமா?

**மாண்புமிகு முதலமைச்சர் பதில்:** இதுகுறித்து, சட்டமன்றத்தில் இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், அதேபோல பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள், எங்கள் கூட்டணிக் கட்சியில் இருக்கின்றவர்கள் கவனஈர்ப்புத் தீர்மானத்தை கொடுத்து, இந்தப் பிரச்சனை குறித்து கேட்டார்கள், கொடுத்து நீங்கள் சொன்னதையும் கேட்டார்கள். இதற்கு சம்பந்தப்பட்ட அறநிலையத் துறை அமைச்சர், மின்துறை அமைச்சர் ஆகியோர் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொன்ன அடிப்படையில் தான் அந்த விளக்கத்தை சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து ஆய்வு செய்யப்படும்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in